உ

சிவமயம்



சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும்

கோண்டாவில், இலண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் திருமதி பரிபூரணம் சுப்பையா** அவர்கள்

இறைபதம் எய்தியமை குறித்த

# நினைவு மலர்

24.02.2018

In Loving Memory of

## Late Mr Paripooranam Suppiah

உ

# அமரர் திருமதி பரிபூரணம் சுப்பையா

அன்னை மடியில்

27 * 02 * 1924



ஆண்டவன் அடியில்

30 * 01 * 2018

## திதி வெண்பா

ஆண்டு ஏவிளம்பி அமைந்த தைத்திங்கள்
பூண்ட புர்வபக்க சதுர்த்தசியில் - வேண்டும்
பரிபூரணம் அம்மை பாருலகுப் பற்றறுத்து
திருநீலகண்டன் கழலடைந்தார் காண்



உ

சிவமயம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றோமே

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான் முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே

பித்தாபிறை சூடிபெரு மானே அருளாளா
எத்தால்மற வாதேநினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அத்தாஉனக் காளாயினி அல்லேலென லாமே

## கோளறு பதிகம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பு இரண்டு முடனே
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

நிரைகழல் அரவம் சிலம்பொலி அலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகள் ஓர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்

கரைகெழு சந்துங் கார்அகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமா மலை யமர்ந்தாரே

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெரும் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவ னென்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதயாய விடங்களில் பலவல்லல் சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு வாலவாயர னிற்கவே

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
யேற்றாயடிக் கேயிர வும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே

## திருவாசகம்

பானினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
யுலப்பிலா வானந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துட் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காகத்
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா – விளம்பே

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தருள
சீதவள யவற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற வுழறி
உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பு மறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
தில்லை சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்
நிலவி லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள்வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புரிய வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமைந்த பெருமாளே

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

# அமரர் திருமதி சுப்பையா பரிபூரணம் அவர்களின்

## வாழ்க்கை வரலாறு

பேபி(baby) என்று அழைக்கப்படும் பரிபூரணம் 27.02.1924 ஆம் ஆண்டு கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திரு திருமதி முத்தையா சிவபாக்கியம் தம்பதிகளின் மகளாக சிங்கப்பூரில் பிறந்தார். இவர் பின்னர் இலங்கை சென்று தனது கல்வியை யாழ் இராமநாதன் கல்லூரியில் பயின்றார். உரிய பருவம் அடைந்ததும் புத்தூரைச் சேர்ந்த திரு திருமதி கந்தப்பிள்ளை தங்கம் தம்பதிகளின் மகன் செல்லத்துரை என்று அழைக்கப்படும் சுப்பையாவை மணந்து தன் இல்லற வாழ்க்கையைத் தொடர்ந்தார்.

ஆரம்பத்தில் திருகோணமலையிலும், கொழும்பிலுள்ள கடவத்தையிலும் பின்னர் தன் சொந்த ஊரான கோண்டாவிலிலும் வாழ்ந்தார். இவர் 1978இல் தன் கணவனை இழந்தார். தனிமை அவரை வாட்ட தன் மகனுடன் இலண்டன் வந்து வாழ்ந்தார். 2017இல் இவரின் மகளின் மரணம் இவரை வெகுவாகப் பாதித்தது. இவர் தன் கடமைகளைத் தானே மனம் தளராமல் செய்து வந்தார். 30.01.2018 இல் தன் கடமை முடித்து இறையடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

## மகன் நினைவுகூரல்

கண்ணை இமை காப்பதுபோல் எம்மை வளர்த்து ஆளாக்கிய தாயே, தந்தையார் மறைந்த போதிலும் மனம் தளராது கடமைகளைச் செய்த தாயே! உங்கள் உற்றார் உறவினர்களுடன் அயலவருடனும் பண்பாய் நடந்த தாயே! அக்காவின் மரணத்திலும் மனம் தளராத தாயே! இறுதி நேரத்தில் நீங்கள் கூறிய வார்த்தைகளை நினைவு கூருகின்றேன். எனது மரணம் எனது வயது. நீ மனம் கலங்காமல் உனது கடமையைச் செய். எனினும் உங்கள் பிரிவை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அன்புமகன்

**ரகுதரன்**

## மருமகளின் நினைவுகூரல்

சியாமளா என்று அன்பாகவும் பண்பாகவும் அழைத்து வரவேற்று உபசரித்த மாமி என்றும் எங்கள் நலனுக்காக இறைவனை வணங்குவீர்கள். இன்று உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மருமகள்

**சியாமளா**

## Our Beloved Appamma

we have many fond memories of our Appamma from the past 27 years. we will always remember her wonderful stories, retelling the times of when she was young and how she would also make sure we were well-fed whenever we visited her.

Appamma was a strong woman who lived an amazing 93 years. In particular, her sharpmind and ability to recollect the oldest memories were second to none.

Appamma also loved the company of others and was always happiest when she was with her family and friends.

We will miss our Appamma very much.

Grand Children

Abirami, Vidushan, Mithilan

# உறவுகள் மேம்பட...

குடும்பத்திலும் சரி அலுவலகத்திலும் சரி மனித உறவுகளின் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க...

- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும், பின்விளைவை அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள்.
- எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசூக்காக கையாளுங்கள். விட்டுக்கொடுங்கள்.
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள்.
- நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள். குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
- உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்.
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள்.
- அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்.
- அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.
- மற்றவர் கருத்துக்களில் செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்.
- மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.
- புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.
- அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள். பிரச்சனைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத்தொடங்க முன் வாருங்கள்.

-தத்துவஞானி வேதாத்திதி மகரிஷி

# நல்லன கேளீர்

அன்னை, பிதாவை, மதித்து நட

கண்கண்ட தெய்வம் அவர்களே

குருவைப் பின்பற்றிச் செயல்படு

உனது வழிகாட்டி அவரே

எறும்பு போல் சுறுசுறுப்பாயிரு

உனக்கு வேண்டியதைச் சேமித்து வை

தெய்வமொன்றுண்டு என்பதை நம்பு

நம்பிக்கை கொண்டு வழிபடு

எல்லாந் தெரியுமென்று நினையாதே

உனக்கு தெரியவேண்டியது சொல்லில் அடங்காது

பொருளையும் தேடு — அருளையும் தேடு

புண்ணியத்தைச் செய் - பாவத்தைச் செய்யாதே

சமயம் அறிந்து பேசு — சபையில் தெரிந்து பேசு

உன் வருத்தம் உனக்கே தெரியும்

நீ செய்தவினை உன்னையே சேரும்

உனக்காகவும் மற்றவர்களுக்காகவும் பிரார்த்தி

தெரிந்தவற்றைச் செய்து காட்டு

முயன்றால் முடியாதது ஒன்றமில்லை

ககவலையை மறக்க விநாயகர் கவசம் படி

வினையை வெல்ல விநாயகனைப் போற்று

# நன்றி நவில்கின்றோம்

எங்கள் வாழ்வின் விளக்கு அன்புமிகு திருமதி சுப்பையா பரிபூரணம் அவர்கள் 30.01.2018 அன்று சிவபதம் அடைந்த செய்தி அறிந்து உள்நாடு, வெளிநாடுகளில் இருந்தும் தொலை தொடர்புகள் மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், எமது இல்லம் வந்து துக்கம் அனுட்டித்தவர்களுக்கும், அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர் வளையங்கள் மலர்மாலைகள் வைத்து அஞ்சலி செய்தவர்களுக்கும், சைவ முன்னேற்றச்சங்கத் தினருக்கும் மற்றும் அந்தியேட்டி சபிண்டீகரண பூசையில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

என்றும் அன்புடன்

குடும்பத்தினர்





கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றா இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாது அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாதி
அருள்வாயி அபிராமியே.

Designed & Printed @ JR Print
Tel: 020 8503 6643